பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 16 வெள்ளிக்கிழமை 06.06.2025 கதிர் 209

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சிக்கும் ஈபிடிபிக்கும் இடையில் நேற்று சந்திப்பு நடந்தது. அது தமக்குச் சாதக மானதாக அமையும் என்று தான் நம்புகின்றார் என்று தமிழ் ☞ 2

## டக்ளஸுடனான பேச்சுக் குறித்து சிறீதரன் எம்.பிக்குத் தெரியாது

உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டணி அமைப்பது குறித்து தமிழ்த்தேசியக்கட்சிகளுடன் பேசுவதற்கே கட்சி தீர்மானித்திருந்ததாக சுட்டிக்காட்டிய இலங்கைத் தமி; அரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன், அவ்வாறிருக்கையில் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான கட்சியின் தலைவரான டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்துவது பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் இணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியும், டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் நேற்றைய தினம் (5) சந்தித்துப் பேசவிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இதுவரை காலமும் ஆளும்தரப்பை ஆதரித்துவந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையில் அடிப்படை கொள்கையிலேயே வேற்றுமை நிலவும் பின்னணியில், இச்சந்திப்புக் குறித்து வினவியபோது நேற்றைய தினம் சந்திப்பு நடைபெறவிருப்பதை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் உறுதிப்படுத்தினார்.

இவ்விருதரப்பு சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சிவஞானமும், ஈழமக்கள் ☞ 6

# குச்சவெளி துப்பாக்கிச்சூடு முழு விசாரணை தேவை

## கிழக்குப் பிரதிநிதிகள் கூட்டாக வலியுறுத்து

திருகோணமலை குச்சவெளி பகுதி மீனவர்கள் ஒரு தரப்பினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உடன் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண பிரதிநிதிகள் கூட்டாக வலியுறுத்தினர்.

இந்த சம்பவம் குறித்து முறையான விசாரணை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பல பொய்யான குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைக்கிறார். தமிர்களையும், பிற இனத்தவர்களையும் கேவலப்படுத்துகிறார். யாழ்ப்பாண மக்களே வெகுவிரைவில் இவரை அடித்து விரட்டுவார்கள் என்று குறிப்பிட்டதை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கும், அமைச்சர் சந்திரசேகருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வினை தொடர்ந்து சபை ஒத்திவைப்பு வேளையின் போது கிழக்கு மாகாண பகுதியில் மீனவர்கள் தாக்கப்பட்ட விவகாரம் குறித்து விசேட பிரேரணையை முன்வைத்த ☞ 8

## மன்னார் மனிதப் புதைகுழி குறித்து சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன

மன்னார், சதோச மனித புதைகுழி தொடர்பில் சில தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றின் ஆஜரான சட்டத்தரணி நிறைஞ்சன் தெரிவித்தார்.

மன்னார், சதோச மனித புதைகுழி வழக்கு நேற்று மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ☞ 6

## அச்சுறுத்தி கொழும்பில் ஆட்சியமைக்க ஆளும்தரப்புக்கு இடமளிக்கமாட்டோம்

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

அச்சுறுத்தல்களின் ஊடாகவே தேசிய மக்கள் சக்தி 161 உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியைக் கைப்பற்றியது. அவ்வாறு எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தி கொழும்பு உள்ளிட்ட ஏனைய சபைகளில் ஆளும்தரப்பால் ஒருபோதும் ஆட்சியமைக்க முடியாது. ஜனநாயகத்துக்கு முரணாக ஆட்சியமைப்பதற்கு ஆளும்தரப்புக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அச்சுறுத்தல்களின் ஊடாகவே தேசிய மக்கள் சக்தி 161 உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியைக் கைப்பற்றியது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இல்லாதவாறு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதியொருவர் நேரடியாக ஈடுபட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். பிரசாரத்தில் ஈடுபட்டது மாத்திரமின்றி தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை வழங்குமாறும், அவ்வாறில்லை எனில் அவற்றுக்கு நிதி வழங்கப்பட மாட்டாது என்றும் அச்சுறுத்தினார்.

அவ்வாறு அச்சுறுத்தல் விடுத்த ☞ 6

# உள்ளாட்சி சபைகளில் யாருக்கு ஆதரவு ஈபிடிபி யோசித்த பின்னர் பதிலளிக்கும்

## தமிழ் அரசுக் கட்சியிடம் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வடக்கிலுள்ள சில உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு தமக்கு ஆதரவு வழங்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கட்சி மட்டத்தில் ஆராய்ந்து, வெகுவிரைவில் தமது தீர்மானத்தை அறிவிப்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ளூராட்சி மன்றங்களில் இணைந்து ஆட்சியமைப்பது குறித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் நேற்று வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடின.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் பதில் தலைவர் சிவஞானமும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் பங்கேற்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது வடக்கில் உள்ளூராட்சி மன்றங்களில் ☞ 2

## தமிழ் அரசுக் கட்சியினர்தான் பொய்ச் செய்தி பரப்புகின்றனராம்

### கஜேந்திரகுமார் இப்படியும் அறிவிப்பு

ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகள் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு ஈடுபடுவதாக வெளியான செய்திகள் பொய்யானவை எனவும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் கூட்டணி அமைக்கவிருப்பதனால், அதனை சமநிலைப்படுத்துவதற்காக அவர்கள் தம்மைத் தொடர்புபடுத்தி இவ்வாறான போலிச் செய்திகளைப் பரப்புகின்றனர் எனவும் தமிழ்த்தேசிய பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

ஒற்றையாட்சியை முழுமையாக நிராகரித்து, தமிழர் தேசத்தின் மரபுவழித் தாயகத்தில் சுயாட்சியை நிறுவுவதற்கு ஒன்றிணைந்து பாடுபடுவதற்கு இணக்கம் தெரிவித்து தமிழ்த்தேசிய பேரவைக்கும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் கடந்த 2 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்நிலையில் தமிழ்த்தேசிய பேரவையுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும், ☞ 2

## அதிகாரிகள் மாறவேண்டிய காலம் இது

### ஜனாதிபதி அநுரகுமார உரை

எமது நாட்டின் அழகிய சுற்றுச்சூழல் அமைப்பை அழித்த துயரத்திற்கு இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தின் செயல்கள் காரணமாக அமைந்தன. அந்த சகாப்தத்தை நாம் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டோம். தற்போது அதிகாரிகள் மாற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சுற்றாடலை மீட்டெடுத்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதற்கான பொறுப்பும் எம் அனைவருக்கும் உள்ளது என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

'பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்போம்' முக்கிய கருப்பொருளை முதன்மைப்படுத்தி 'முளைப்பதற்கு இடமளிப்போம்' என்ற தொனிப்பொருளில் உலக சுற்றாடல் தினம் உலகளாவிய ரீதியில் நேற்று கொண்டாடப்பட்டது. ☞ 2

## வடக்கிலுள்ள வீதிகள், பாலங்களை அரசு அபிவிருத்தி செய்யவேண்டும்

### காதர் மஸ்தான் எம்.பி. கோரிக்கை

வடக்கு மக்கள் எந்த காலத்திலும் பெரும்பான்மை கட்சிகளுக்கு வாக்களிப்பது மிகக் குறைவாகும். ஆனால் ஆளும்தரப்பினால் தங்களின் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என்ற நம்பிக்கையிலே தற்போது அந்த மக்கள் வாக்களித்திருக்கின்றனர். அதனால் ஆளும்தரப்பு அந்த மக்களின் நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில் அங்குள்ள வீதி மற்றும் பாலங்களை அபிவிருத்தி ☞ 8

## தையிட்டி விகாரை தொடர்பான பரிந்துரை அறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம் தையிட்டி பிரச்சினைக்கு ஒரு தரப்பினர் இனவாதம் என்ற உருவமளிக்க முயற்சிக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பல்வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட யோசனைகள் மற்றும் பொதுப்படுத்தப்பட்ட யோசனைகளை உள்ளடக்கிய வகையில் நீதியமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளோம். அறிக்கையின் உள்ளடக்க யோசனைகளை செயற்படுத்த நீதியமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. ☞ 8

## இனி இது .....

அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் சந்திப்பு முடிந்த பின்னர் தெரிவித்தார். ஆனால் அத்தகைய உறுதியான உத்தரவாதம் ஏதும் உண்மையில் வழங்கப்படவில்லை. ‘‘காலம் கிடக்கிறதுதானே அண்ணை, பார்க்கலாம்‘‘ என்பதாகத்தான் டக்ளஸின் பதில் அமைந்திருந்தது.

சங்கு – சைக்கிள் கூட்டு சார்பில் புளொட் சித்தார்த்தன் தன்னைச் சந்திப்பது குறித்த தகவலைஊடகம்ஒன்றுக்குத்தெரிவித்து,தனது வழக்கமான பாணியில் அரசியல் இலாபம் தேடப்போய், அந்தச் சந்திப்பே இடம்பெற முடியாத நிலைமை ஏற்படக் காரணமாகி, தனது ஆருயிர் நண்பர் சித்தார்த்தனுக்குத் தர்சங்கடத்தை ஏற்படுத்திய காரணத்தால், மனச்சாட்சி உறுதி, சிவாஞானத்திற்குப் பதில் சொல்லாமல் விட்டாரோ என்னவோ, உறுதியான பதில் சொல்லப்படவில்லை என்பதுதான் உண்மை.

சிவஞானத்தாரைப் பொறுத்தவரையில் அவர் எல்லாவற்றையுமே ‘பொஸிட்டிவ்‘ ஆகப் பார்ப்பவர். எதிர்ச் சிந்தனை உதவாது என்று சிந்திப்பவர். அதனால் அவர் டக்ளஸின் சந்திப்பிலும் சாதகமான பதில் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை வெளியிட்டார். அவர் இப்படித்தான் கஜேந்திரகுமாரின் சந்திப்பின் பின்னரும் நம்பியிருந்தார். தமிழ் காங்கிரஸ் தமது கட்சிக்கு சபைகளில் ஆதரவளிக்கும் என்ற நம்பிக்கை கஜேந்திரகுமாரைச் சந்தித்த பின்னர் தனக்கு உறுதியாக ஏற்பட்டதாகச் சொன்னார். ஆனால், இரண்டே நாள்களில் நிலைமை தலைகீழானது. சிவஞானத்தார் நம்பிக்கொண்டிருந்த கஜேந்திரகுமார் தமிழ் அரசுக் கட்சியைக் கவிழ்ப்பதற்கான கன கச்சிதமான திட்டத்துடன் சங்குடன் கூட்டு வைத்தார். இப்போது சிவஞானத்தார் டக்ளஸ் கைவிடமாட்டார் என்று வைக்கும் நம்பிக்கைக்கு என்ன நடக்குமோ யார் கண்டார்.

நேற்றையசந்திப்பில்டக்ளஸ்ஒருவிடயத்தில் உறுதியாக இருந்தார். எந்தவொரு சபையிலும் தமது கட்சி ஆட்சியமைக்கும் உரிமையைக் கோரப்போவதில்லை. ஆட்சியமைக்க யாருக்காவது ஆதரவு தெரிவித்தாலும் ஆட்சியில் பங்கு கேட்கப்போவதில்லை. எதிர்க் கட்சியிலேயே இருப்பது என்பதில் அவர் மிக உறுதியாக இருக்கிறார். சிவஞானத்தாரைப் பொறுத்தவரைக்கும்அதிகாரத்தைப்பிடிப்பதற்கு கையுயர்த்தி உதவினால் மட்டுமேகூடப் போதுமானதுதான். அதன் பிறகு எப்படியும் சமாளித்துக்கொள்ளலாம்என்றுநினைக்கிறார். அதனால் டக்ளஸ், யாழ். மாநகர சபை உட்பட சில சபைகளிலாவது தமக்கு ஆதரவாகக் கையுயர்த்தினால் நல்லது என்பது அவரது எதிர்பார்ப்பு.

அரசியலைப் பொறுத்த வரையில் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும், அது எப்போது கடிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே நடப்பதை வேடிக்கை பார்க்க வேண்டியதுதான்.

இதற்கிடையில், தமிழ் அரசுக் கட்சி பகிரங்கமாக டக்ளஸின் ஆதரவைக் கேட்டிருப்பதும் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. ஒரு துரோகியிடம் ஆதரவு கேட்பதா என்று பொங்குபவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் அறியாத விடயம் என்னவென்றால், அவர் பகிரங்கமாக இந்த விடயத்தைக் கையாளவில்லை என்றால், அவரது கட்சியிலிருந்தே தேர்தல் கேட்டவர்களில் பலர் நேரடியாக டக்ளஸை அணுகி தமக்கு ஆதரவு தரும்படி கேட்டு ‘டீல்‘ பேசப் புறப்பட்டிருந்தார்கள் என்பதுதான். அதாவது, சித்தார்த்தன் வகையறாக்கள் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் இருக்கிறார்கள். வலி. தெற்கு பிரதேச சபையிலிருந்து தலைவராகக் கூடியவர் என்று கருதப்படும் ஒருவர் இப்படி டக்ளஸை அணுகிப் பேசியிருக்கிறார். அந்த வகையில் காங்கிரஸும் சங்கும் ஏற்படுத்தியிருக்கும் தற்போதைய அரசியல் குழறுபடிகள் காரணமாக ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகளைச் சமாளிக்க தானே களத்தில் நேரடியாக இறங்கவேண்டிய இக்கட்டு சிவஞானத்தாருக்கு.

தமிழ் அரசுக் கட்சிக்குள் இந்த நெருக்கடி என்றால், காங்கிரஸிற்குள் தலைவர் கஜேந்திரகுமாரிற்கே குழப்பம் போல் உள்ளது. சங்கு சைக்கிள் கூட்டு டக்ளஸுடன் பேசப் போகின்றது என்கிற செய்திக்குத் தான்தான் மூலகாரணம்என்பதைடக்ளஸ்தேவானந்தா வெளிப்படுத்தியதும்அவரைத்தொடர்புகொண்ட ஒரு ஊடகத்திற்கு கருத்துத் தெரிவித்த அவர், சித்தார்த்தன் பேசியது தனக்குத் தெரியாது என்றும், தமது கொள்கைக்கு மாறாக யாராவது அப்படிப் பேசியிருந்தால் அவர்கள் கூட்டிலிருந்து வெளியேறலாம் என்று தெரிவித்திருந்தார். அதன் பின்னர் நேற்று டக்ளஸ் – சிவஞானம் சந்திப்பு இடம்பெற்றதும் தமிழ் அரசுக் கட்சிதான் இந்தப் பொய்யைப் பரப்புகின்றது என்றும் சித்தார்த்தனிடம் தான் கேட்டபோது அப்படி டக்ளஸுடன் பேசவில்லை என்று சித்தார்த்தன் தன்னிடம் மறுத்தார் என்றும் சொல்லியிருக்கிறார். முன்னுக்குப் பின் முரணாக அவரே ஏதோ பிதற்றத் தொடங்கியிருப்பது அவரும் சரியாகக் குழம்பிப் போயிருக்கிறார் என்பதைத்தான் காட்டுகிறது.

சித்தார்த்தன் டக்ளஸுடன் பேசவில்லை என்றால் அதனை மறுக்க வேண்டியவர் அவரே. நேற்றுக் காலையில்கூட இவர்கள் இருவரும் தியாகி சிவகுமாரனின் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். அப்போதுகூட தங்களுக்கு இடையிலான சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டி-ருக்கின்றது என்று கூறினரே தவிர டக்ளஸுடன் தான் இது குறித்துப் பேசவேயில்லை என்று சித்தார்த்தன் மறுக்கவில்லை. உண்மை அப்படியிருக்கும்போது கஜேந்திரகுமார் மட்டும் சித்தார்த்தன் மறுத்தார் என்று சொல்வதை எப்படி நம்ப முடியும். கொள்கைக் கூட்டு உறுதியாக இருந்தால், டக்ளஸுடன் தான் பேசவில்லை என்பதை சித்தார்த்தனைக் கொண்டுதான் கஜேந்திரகுமார் மக்களுக்குச் சத்தியம் செய்விக்கவேண்டும். சித்தார்த்தனுக்குப் பதிலாக அவர் சத்தியம் செய்யக்கூடாது.

மக்களை ஏமாற்றுவது என்று கங்கணங்கட்டிக்கொண்ட பின்னர் யார் எப்போது எதைச் சொல்லமாட்டார்கள் என்கிறீர்களா, அதுவும் சரிதான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்ளாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டிணைந்து ஆட்சியமைப்பதற்கான சாத்தியப்பாடு குறித்து ஆராயப்பட்டது.

அதன்படி வடக்கிலுள்ள சில உள்ளுராட்சி மன்றங்களில் தமிழரசுக்கட்சி கூடிய ஆசனங்களை பெற்றிருந்தாலும், ஆட்சியமைப்பதற்குப் போதுமான பெரும்பான்மை ஆசனங்கள் இன்மையால் அம்மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆதரவு வழங்குமா என டக்ளஸ் தேவானந்தாவிடம் சிவஞானம் வினவினார்.

அதற்குப் பதிலளித் டக்ளஸ் தேவானந்தா, இதுபற்றி தமது கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தீர்மானத்தை அறிவிப்பதாகத் தெரிவித்தார். அதன்படி அறிவிக்கப்படும் தீர்மானம் சாதகமானதாக அமையும் என தமிழரசுக்கட்சியின்பதில்தலைவர்சிவஞானம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

“வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும்வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள உள்ளுராட்சி மன்றங்களில் எமது கட்சி ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. எனவே அந்த உள்ளுராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு எமது ஆதரவை வழங்குமாறு தமழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் என்னிடம் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கைவிடுத்தார். அதற்குப் பதிலளித்த நான், பக்கச்சார்பற்ற, மக்கள் நலன் சார்ந்த எமது கொள்கையின் பிரகாரம் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வெகுவிரைவில் தீர்மானத்தை அறிவிப்பதாகக் குறிப்பிட்டேன்” என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## தமிழ் அரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்றைய தினம் (5) சந்திப்பு இடம்பெறவிருப்பதாகவும், இதன்போது வட, கிழக்கில் உள்ளுராட்சி மன்றங்களில் கூட்டணிஅமைத்துஆட்சியமைப்பதுகுறித்துக் கலந்துரையாடப்படும் எனவும் டக்ளஸ் தேவானந்தாவை மேற்கோள்காட்டியும், வேறு மூலங்களின் வாயிலாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதுமாத்திரமன்றி சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும்தர்மலிங்கம்சித்தார்த்தன் ஆகியோரின் வேண்டுகோளுக்குஇணங்கநேற்றுமுன்தினம் (3) நடைபெறவிருந்த இச்சந்திப்பு, நேற்றைய தினத்துக்குப் பிற்போடப்பட்டிருந்தது. பின்னர் அது காலவரையறையற்றுப்பிற்போடப்பட்டது.

இருப்பினும் இதனை முற்றாக மறுத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகள் டக்ளஸ் தேவானந்தாவை சந்திப்பதற்குத் திட்டமிட்டிருக்கவில்லை எனவும், அதுகுறித்து வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானவை எனவும் தெரிவித்தார்.

அத்தோடு நேற்று முன்தினம் மேற்கூறப்பட்டவாறு செய்திகள் வெளியானவுடன், அச்செய்திகள் பொய்யானவைஎன்பதைசுரேஷ்பிரேமசந்திரன் உறுதிப்படுத்தினார் எனவும், நேற்றைய தினம் சித்தார்த்தனுடன் தொடர்புகொண்டு பேசியபோது அவரும் அதனை மறுத்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும்இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியும், டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் கூட்டணி அமைக்கவிருப்பதாகவும், அதனை சமநிலைப்படுத்துவதற்காக அவர்கள் (தமிழ் அரசுக் கட்சியினர்) தம்மைத் தொடர்புபடுத்தி இவ்வாறு பொய்யான செய்திகளைப் பரப்புகின்றனர் எனவும் கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

## குச்சவெளி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர்,

‘மிகவும்கவலையுடன்சபைஒத்திவைப்பு வேளையில் இந்த பிரச்சினையை முன்வைக்கிறேன். இந்த பிரச்சினை கிழக்கு மாகாணத்தில் மீனவர்கள் நீண்டகாலமாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் துன்புறுத்தல்களை வெளிப் படுத்தியுள்ளது. கல்முனை, கல்முனைகுடி, சாய்ந்தமருது,அம்பாறை மாவட்டம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த கடலோர மீனவச் சமூகங்கள் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு அமைப்புசார் கொள்ளைக்கூட்டத்தால் திட்டமிட்ட வகையில் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

ஆழ்கடலில் பிடிக்கும் மீன்கள் கொள்கையடிக்கப்படுகிறது. மீனவ உபகரணங்கள்அழிக்கப்படுகின்றன.இத்தனை காலமாக இதற்கு எதிராக நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இந்த கொள்ளைச் செயல்களுக்கு தலைமை வகிப்பவரின் பெயரை அனைவரும் அறிவார்கள். அந்த பெயரை இங்கு சொல்வது நாகரீகமல்ல, அவர் களுவாஞ்சிக்குடி பகுதியில் வேகப்படகுகளை கொண்டு இந்த குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார். அவர் தனிமனிதரல்ல அவருக்கு பின்னால்பெரியகொள்ளைகூட்டமே உள்ளது.

முன்னாள் போராளி என்று தன்னை குறிப்பிட்டுக்கொண்டு நாடாளுமன்றத்துக்கு வந்து, தற்போது பதவி இழந்துள்ளவர்களின் குழுக்கள் இந்த சம்பவத்தில் தொடர்புப்பட்டுள்ளார்கள். எமது மீனவர்கள் குற்றவாளிகலல்ல, இவர்கள் கடலுக்கு செல்ல அச்சமடைந்துள்ளார்கள் . இந்த கொள்ளை கூட்டத்தால் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள். இந்த சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விசேட கவனம் செலுத்தி பதிலளிக்க வேண்டும்‘ என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றியஎம்.ஏ.ஹிஸ்புல்லாமுன்வைத்த பிரேரணையை நான் ஆமோதிக்கிறேன். இது நீண்டகால பிரச்சினையாகும். இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும். அம்பாறை,சாய்ந்தமருது,ஒலுவில், காத்தான்குடி, திருகோணமலை பகுதி மீனவர்கள்ஆழ்கடலுக்குசென்றுமீன்பிடிக்கும் போதுகரையில்உள்ளஒருகொள்ளைக்கூட்டம் மீனவர்களை தாக்கி சொத்துக்களை கொள்ளையடிக்கிறார்கள். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, திருகோணமலை பகுதியில் மீனவர் ஒருவர் மீது அண்மையில் துப்பாக்கிச்சூட்டு பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.15 அல்லது 20 நாட்களுக்கு முன்னர் மீனவர் ஒருவர் கடற்படையினரால் தாக்கப்படும் காணொளி ஒன்று வெளியாகியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில்மாவட்ட அபிவிருத்திகுழுகூட்டத்தில் பேசியபோது பொலிஸ் அதிகாரி குறிப்பிடுகிறார் வடக்கில் அவ்வாறான முறைப்பாடு ஏதும் பதிவு செய்யவில்லை என்று.

எமது தேசிய தலைவன் வடக்கில் ஆண்ட காலத்தில் எமது படகுகள் அச்சமில்லாமல் கடலுக்கு சென்றன. கடற்படையினர் எம்மவர்களை கொன்றார்கள். இப்போது நிலைமை மோசமாகவுள்ளது. அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய பணித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அரசியல்வாதிகள் முட்டாள்களாக இருக்கலாம், இவர்களின் பொய்யால் ஏமாறுவதற்கு தமிழர்கள் முட்டாள்கள் அல்ல,

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், இந்த சம்பவம் குறித்து முப்படைகளின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளேன். கிழக்கு மாகாணத்தில் உள்ள இந்த கொள்ளையர் கும்பல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

எனக்கு முன்னர் உரையாற்றிய வசூல் மன்னன், மக்களின் பணத்தை மோசடி செய்துள்ளார். இவர்ளங்களைபற்றிபோலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார். இனியும் பைத்தியம் போல் செயற்பட வேண்டாம் என்று அவரிடம் குறிப்பிட்டுக் கொள்கிறோம் நீங்கள் பைத்தியம் என்பதை அனைவரும் அறிவார்கள். பெண்களை கண்டால் பைத்தியமாகிவிடுவீர்கள். மலையக மக்களை கேவலப்படுத்தும் நரித்தனமானவன் யார் என்றால் அது நீ தான், இவர் பைத்தியன் என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த பைத்தியத்தை யாழ் மக்களே வெகுவிரைவில் அடித்து அனுப்புவார்கள். அதற்கான காலம் வெகுவிரைவில் வரும். செருப்பால் அடித்து அனுப்புவார்கள் என்றார்.

இதன்போது உரையாடுவதற்கு அனுமதி கோரிஅர்ச்சுனாகடுமையாககோரினார். அதற்கு சபைக்கு தலைமை தாங்கிய உறுப்;பினர் அனுமதி வழங்கவில்லை.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர கிழக்கு மாகாண மீனவர்கள் தாக்கப்பட்டமைகுறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்டமிட்ட வகையில் இடம்பெறும்இவ்வாறானகுற்றச்செயல்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டுள்ளது என்றார்.

## அதிகாரிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்ஒருகட்டமாகஜனாதிபதிஅநுரகுமார திசாநாயக்க தலைமையில் உலக சுற்றாடல் தினம் கேகாலையில் நேற்று முற்பகல் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி

இன்று மிக முக்கியமான நாள். நான் ஏராளமான கூட்டங்களில் உரையாற்றி யுள்ளேன். பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளேன். ஆனால் இன்று நான் வெறும் உரையை மாத்திரம் நிகழ்த்த போவதில்லை. இந்த உரை எமது தாய்நாடு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு மீதான எமக்குள்ள பிணைப்பு மற்றும் பொறுப்பு பற்றியதாகும்.

மேலும் இந்த நிகழ்வு வெறுமனே ஒரு நிகழ்வு மாத்திரமல்ல. சுற்றுச்சூழல் மீதான எமது பிணைப்பு, உணர்வு மற்றும் பொறுப்பு என நான் நம்புகிறேன்.

எமது நாடு தொடர்பில் புராதன காலத்தில் எழுதப்பட்ட புத்தகங்களிலும் நவீன காலங்களில் வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்திக்கும் போதும் “ டீநயரவகைரட ளுசஷ் டுயமெய“ என்ற வார்த்தையை கூறுவார்கள். எனினும் இந்த அழகின் அடியில் மிகவும் ஆழமான பேரவலம் உள்ளது. சிறுவயதில் எமது நாடு மண்சரிவு வெள்ளம் அற்ற நாடாக இருந்தது. ஆனால் இன்று இந்த அனர்த்தங்களை காண்கிறோம். அந்த உரிமைகளோடு பிறந்த நாம் வெள்ளம் மற்றும் வரட்சியினால் ஏற்பட்ட அழிவுகளை சந்திக்கிறோம்.

அடுத்ததாக யானை மனித மோதல் உள்ளது. வருடத்தில் 173 பேர் யானைகளால் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால்இந்தவருடத்தில் 450 இற்கும் மேற்பட்ட யானைகளும் கொல்லப்பட்டுள்ளன. இதனை பார்க்கும் போது ஒரு மனிதன் கொல்லப்படும் போது 3 யானைகளை இழக்க நேரிட்டுள்ளது. மிக சிறந்த பல்வகை கொண்ட நாடு எமக்கு கிடைத்துள்ள போதிலும் சுற்றாடல் கட்டமைப்பு மற்றும் வாழும் உயிர்களுக்கு இடையில் பாரிய மோதல் காணப்படுகிறது.

எனவே எமக்கு இந்த சுற்றுச்சூழல் தொடர்பில் கைவிட முடியாத பொறுப்பும் கடமையும் உள்ளது. இந்த நாட்டில் சிறந்த சுற்றுச்சூழல் அமைப்பை மீள கட்டியெழுப்ப வேண்டும். இந்த அனர்த்தங்கள் இவ்வாறே தொடர்ந்தால் எமது எதிர்கால சந்ததியினருக்கு பேரவலத்தையே நாம் விட்டுச் செல்வோம்.

நாட்டு மக்களாக இந்த சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுத்து எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாப்பதே எமக்குள்ள பொறுப்பாகும். இந்த கட்டமைப்புக்கு பின்னால் ஏராளமான வலுவான

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# செயற்கை நுண்ணறிவுடன் பஸ்களில் கண்காணிப்புக் கருவி அடுத்த மாதம்

வீதிப் போக்குவரத்து விபத்துக்களைத் தடுப்பதற்கு 85திட்டங்களைஉள்ளடக்கியவகையில்செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு எதிர்வரும் இரண்டு மாத காலப்பகுதிக்குள் 40 அரச மற்றும் தனியார் பேருந்துகளில்செயற்கைநுண்ணறிவு(ஏஐ)தொழில்நுட்பத்துடன்கண்காணிப்புகருவிகள்பொருத்தப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலத்தை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்களின் பிரதான போக்குவரத்து ஊடகமாக அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் காணப்படுகின்றன. இருப்பினும் பொது போக்குவரத்து சேவைகள் மக்களுக்கு போதுமான வசதிகளை வழங்குகிறதா என்பதில் பல சிக்கல் நிலை காணப்படுகிறது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை இந்த திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக விரிவுப்படுத்த உத்தேகிக்கப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கு இடையிலானபேருந்துசேவைக்கானஅனுமதிப்பத்திர சேவை புதுப்பிக்கப்படும்.

வீதி விபத்துக்களை தடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு விபத்துக்களைத் தடுப்பதற்கு 85 திட்டங்கள் அடங்கிய செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் கெரண்டியல்ல பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் பலர் உயிரிழந்தார்கள். இந்த விபத்து தொடர்பில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களுக்கிடையிலும், மாகாணங்களுக்கு மிடையிலும் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துமகளின் தரம் குறித்து அதீத கவனம் செலுத்தப்படும். எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் 40 அரச மற்றும் தனியார் பேருந்துகளில் செயற்கைநுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்ப வசதியிலா கருவிகள் பொருத்தப்பட்டு, கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

இடைநிறுத்தப்பட்டுள்ள வீதி நிர்மாணிப்புக்கள் வெளிநாட்டு நிதியுதவியுடன் மீள ஆரம்பிக்கப்படும். 12 ஆண்டுகால உத்தரவாதத்துடன் வீதிகள் புனரமைக்கப்படும். மத்திய அதிவேக நெடுஞ்சாலைகள் புனரமைக்கப்படும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வீதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும் முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படும் என்றார்.

## கொழும்பு மாநகர சபையில் ஆளும்தரப்புக்கு ஆதரவில்லை

### முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

கொழும்பு மேயர் வேட்பாளர் தொடர்பில் கூட்டணி கட்சிகளுக்கிடையில் கலந்துரையாடப்படவேண்டியது அவசியமாகும். அந்த அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் இந்த விவகாரம் தொடர்பில் எம்முடன் பேச்சு நடத்தும் என்று எதிர்பார்க்கின்றோமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பது குறித்து முஜிபுர் ரஹ்மான் மற்றும் நாமல் ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வரும் நாட்களில் ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடத்தவுள்ளோம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரை மேயராக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவே எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. மேயர் வேட்பாளர் தொடர்பில் கூட்டணி கட்சிகளுக்கிடையில் கலந்துரையாடப்பட வேண்டியது அவசியமாகும். அந்த அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் இந்த விவகாரம் தொடர்பில் எம்முடன் பேச்சு நடத்தும் என்று எதிர்பார்க்கின்றோம்.

கொழும்பு மாநகரசபை விவகாரம் தொடர்பில் தனக்கும் ஸ்திரமான நிலைமை என்ன என்பது தெரியாது என்றே நாமல் ராஜபக்ஷவும் குறிப்பிட்டிருந்தார். எமது கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சிலருடன் ஆளும்தரப்பு பேச்சுவா நடத்தியிருக்கிறது. ஆனால் இது கட்சி மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் இன்னும் இது தொடர்பில் எம்முடன் பேசவில்லை.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவிடம் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேரத்தை வழங்குமாறு கோரினோம். விரைவில் எம்மை அழைப்பதாகக் கூறியிருக்கின்றார். கொழும்பு மாநகரசபை தொடர்பில் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் என்னுடன் கலந்துரையாடியிருக்கின்றனர். மேயர் வேட்பாளர் தொடர்பில் எமக்கு திருப்தியளிக்கக் கூடியவாறான தெளிவுபடுத்தலை கட்சி வழங்கவேண்டும்.

கொழும்பில் எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்க வேண்டுமெனில் பல்வேறு கட்சிகள் இணையவேண்டும். ஆனால் இதுவரை எந்தக் கட்சியுடனும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. நாம் ஒரு கூட்டணியின் பங்காளிக் கட்சியாக இருப்பதால் அதற்கே முன்னுரிமையளிப்போம். எனவே ஆளும்தரப்புக்கு ஆதரவளிப்பது தொடர்பில் எவ்வித தீர்மானமும் இல்லை என்றார்.

## பொதுமகன் சாதுரியத்தினால் தொடருந்து விபத்து தவிர்ப்பு

கடலோர தொடருந்து பாதையில் நேற்றையதினம் ஏற்படவிருந்த பெரும் விபத்தினை மொரட்டுவை, மோதர பகுதியைச் சேர்ந்த ஒருவரால் தடுக்க முடிந்துள்ளது.

கரையோர தொடருந்து மார்க்கத்தில் மொரட்டுவை, மோதர பிரதேசத்தில் தண்டவாளம் சேதமடைந்து காணப் பட்டுள்ளது.

சேதமடைந்த தொடருந்து பாதையைக் கண்டதும், சமந்த பெர்னாண்டோ என்ற நபர் விரைந்து செயற்பட்டு, அந்நேரத்தில் வந்து கொண்டிருந்த ரயிலை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தனது உயிரைப் பணயம் வைத்தும் கூட, ஒரு பெரிய பேரழிவைத் தடுத்த சமந்த பெர்னாண்டோவின் செயலுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

மகனின் வீட்டுக்கு அருகில் இருந்தேன். பெண்ணொருவர் தொடருந்து பாதையை அவதானித்துக் கொண்டிருந்தார். அவர் என்னை அழைத்து தண்டவாளம் உடைந்துள்ளதாக தெரிவித்தார். பின்னர் நான் அங்கு அருகே சென்று பார்த்தேன். அப்போது தொடருந்து ஒலி எழுப்பிக் கொண்டு வந்துக்கொண்டிருப்பதை அவதானித்தேன். உடனடியாக வீட்டுக்குச் சென்று ஆடையொன்றை எடுத்துக்கொண்டு, தொடருந்து வரும் போது தண்டவாளத்தின் நடுவே சென்று ரயிலுக்கு ஆடையை காண்பித்து அசைத்துக் காட்டினேன்.

பின்னர் தொடருந்து நிறுத்தப்பட்டது. அப்போது அங்கிருந்த அதிகாரியிடம் தண்டவாளம் உடைந்துள்ளது என்றேன். பின்னர், தொடருந்துவே திணைக்கள அதிகாரிகள் அங்கு வந்து தண்டவாளத்தை சரிசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவத்தின் காரணமாக பாணந்துறையிலிருந்து மொரட்டுவை வரையிலான கரையோர தொடருந்து சேவைகள் தாமதமடைந்தன.

பின்னர் தொடருந்துவே ஊழியர்கள் தொடருந்து பாதையை சரி செய்தனர். சேதமடைந்திருந்த தண்டவாளம் சீரமைக்கப்பட்ட பிறகு தொடருந்து சேவைகள் தற்போது வழக்கம் போல் இயங்குவதாக தொடருந்துவே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

## துமிந்தவுக்கு மறியல் காலம் நீடிப்பு



முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவை ஜூன் 19 வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு ஹெவ்லொக் சிட்டி குடியிருப்பு வளாகத்தில் வசிக்கும் பெண்ணொருவரின் பயணப் பையில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி தொடர்பில், முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கடந்த 23ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கி கடந்த செவ்வாய்க்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது, மேலும் இது தொடர்பாக இரண்டு பெண்களும் ஆணொருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் போது வெளியான தகவல்களுக்கு அமைய, முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கைது செய்யப்பட்டார்.

பின்னர், முன்னாள் அமைச்சரை கல்கிஸ்ஸ பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

பின்னர் அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதோடு, விசேட வைத்தியரின் பரிசோனையைத் தொடர்ந்து, அவரை மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## உள்ளூராட்சி ஆட்சி – தமிழ்க் கட்சிகளின் போட்டி

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தற்போது தமிழ்க் கட்சிகள் இடையே கடும் போட்டியும் உள்குத்து அரசியலும் தீவிரமடைந்து வருகின்றன. இது தேர்தல் முடிவுகளுக்குப் பிறகும் தொடரும் 'போர்க்கள அரசியலை' மக்கள் மீண்டும் பார்க்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளதாகவே தெரிகிறது.**

**அரசியல் என்பது மக்களுக்கான சேவையின் மேடையாக இருக்க வேண்டியது. ஆனால் தற்போது பல தமிழ் கட்சிகள், குறிப்பாக முன்னணி தேசியவாதக் கட்சிகளும், சிறுபான்மைக் குழுக்களும், உள்ளூராட்சி சபைகளில் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக ஒருவரை ஒருவர் விமர்சிப்பதோடு மட்டுமல்லாமல் கூட்டணிகளை உடைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன. சில சபைகளில் மக்கள் அளித்த've mandate–(அரசியல் அதிகாரம்) பொருட்படுத்தப்படாமல், பதவிகளுக்காக கட்சி கொள்கைகளை மீறும் நிலைக்கும் கட்சியினர் சென்றுள்ளனர்.**

**இந்நிலையில், முக்கிய தமிழ்க் கட்சிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழர் ஜனநாயகக் கட்சியும், பில்லயனின் தரப்பும், எழுச்சி குழுக்களும் ஒவ்வொன்றாக தனித்தனியே ஆட்சி அமைக்க முயற்சிக்கின்றன. இது, இணைவையும் ஒற்றுமையையும் எதிர்பார்த்த மக்களிடையே பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.**

**கட்சி வழிபாடு, தலைமை நம்பிக்கை, ஆட்சி வாய்ப்பு, பதவிக்காக்கும் பந்தங்கள்– இவையெல்லாம் தற்போது உள்ளாட்சி நிலவரத்தில் பொதுமக்கள் பயன்பெறும் அரசியலாக இல்லாமல், தனிப்பட்ட லாபம் தேடும் அரங்கேட்டாகவே மாறியுள்ளன. பல சபைகளில் மக்களுக்கு தேவையான தண்ணீர், கழிவுநீர், சாலை, குப்பை மேலாண்மை, போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை தேவைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. ஆனால் இவற்றைப் பற்றி கவலைப்படும் அரசியல்வாதிகள் குறைவாகவே உள்ளனர்.**

**உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற கட்சிகள், மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பொருட்டு பணியாற்ற வேண்டும் என்பதே பொது நலக்கருத்து. ஆனால் தற்போது உருவாகி இருக்கும் சூழல், மக்களுக்காக அல்ல, பதவிக்காகவே தமிழ்க் கட்சிகள் ஒருவரையொருவர் இழிவுபடுத்தும் ஒரு வருத்தமான நிலையை காட்டுகிறது.**

**தமிழர் அரசியல் மிகக் கடுமையான ஒரு பரிட்சைக் குள்ளாகி இருக்கிறது. இணைப்பு இல்லாத தமிழ் தேசிய அரசியல், இன சுய தீர்மானத்திற்கான போராட்டத்தை பலவீனமாக்குகிறது. உள்குத்துகள், பதவிக் களஞ்சியங்கள், பகைமை நோக்கங்கள் ஒதுக்கப்பட்டு, மக்கள் நலனே வழிகாட்டியாக இருக்கவேண்டும்.**

**இந்நிலையில், தமிழ்க் கட்சிகள் விரைந்து ஒன்று கூடிக் கூட்டமைப்புச் சார்ந்த ஆட்சி அமைப்புகளை நோக்கி செல்லவேண்டும். இல்லையெனில், இந்தத் தேர்தல் வெற்றிகள், மக்களின் நம்பிக்கையை இழக்கும் ஒரு வரலாற்றுப் பிழையாகவே பதியக்கூடும்.**

# ஐ.நா. அதிகாரிகள் நேற்று சபாநாயகருடன் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆன்ட்ரே பிரெஞ்ச் (Marc Andre Franche) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான வதிவிட ஆலோசகர் பற்றிக் மக்கார்த்தி (Patrick McCarthy) ஆகியோர் இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவை அண்மையில் நாடாளுமன்ற வளாகத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி தொடர்பில் பத்தாவது நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் மற்றும் புதிய திட்டங்கள் குறித்தும், இத்திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்திக்கொண்டு அவற்றை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் இச்சந்திப்பில் பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டன.

நாடாளுமன்ற பிரதிநிதிகள், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகளின் மக்கள் பிரதிநிதிகள், ஆய்வாளர்களுக்காக நாடாளுமன்றக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்றை அமைப்பது தொடர்பிலும், நாடாளுமன்றத்திற்குள் சட்டப் பிரிவு ஒன்றை உருவாக்குவது தொடர்பிலும் இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை, ஜனநாயகத்தை வலுப்படுத்துதல், இலஞ்சம், மோசடி மற்றும் ஊழல் இல்லாத அரசாங்கத்தை உருவாக்குதல் மற்றும் இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான புதிய அணுகுமுறைகளை பின்பற்றுதல் ஆகியவை குறித்தும் இங்கு மேலும் கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகத்தின் இலங்கை விஜயம் தொடர்பிலும், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்- ஆன்ட்ரே பிரெஞ்ச் சாபாநயகருக்கு விளக்கமளித்தார்.

# தோட்டப்புறப் பாடசாலைகளில் கல்வித் தரம் மேம்படவேண்டும்

பெருந்தோட்ட பகுதிகளில் வாழ்பவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட வேண்டுமாயின் பெருந்தோட்டங்களில் கல்வி துறை மேம்படவேண்டும். களுத்துறை மாவட்டத்தில் உள்ள தோட்ட பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்கு ஏதேனும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்று தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ்க ரங்கனாத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது மேலதிக கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பிரதி கல்வி அமைச்சர், மதுர செனவிரத்ன வருமாறு பதிலளித்தார். களுத்துறை மாவட்டத்தில் 62 தமிழ் பாடசாலைகள் உள்ளன. களுத்துறை மாவட்டத்தில் கலைத்துறை பாடங்கள் கற்பிக்க கூடிய 08 பாடசாலைகளும், வர்த்தகத்துறையில் கற்பிக்க கூடிய 17 பாடசாலைகளும் உள்ளன. பெரும்பாலான பாடசாலைகளில் கலை மற்றும் வர்த்தக பாடப்பிரிவுகள் ஒருமித்த வகையில் உள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் தமிழ் மொழில் பாடசாலைகளில் நிலவும் பௌதீக மற்றும் மானிட வசதிகளில் நிலவும் குறைப்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன என்றார்.

இதன்போது எழுந்து மேலதிக கேள்விகளை முன்வைத்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ்க ரங்கனாத், நான் களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். எமது பகுதியில் பெருமளவிலான தமிழ் பாடசாலைகள் உள்ளன. தோட்டப்பகுதிகளை அண்மித்த வகையில் சுமார் 45 ஆயிரம் பேர் வரையில் வாழ்கிறார்கள்.

தோட்டப்பகுதிகளில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக புளத்சிங்கள, அகலவத்தை மற்றும் பாலிந்தநுவர ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் பல பிரச்சினைகள் உள்ளன. பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட வேண்டுமாயின் அவர்களின் பிள்ளைகளின் கல்வித்தரம் மேம்பட வேண்டும். இதற்கு ஏதேனும் விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்ன, பெருந்தோட்ட பகுதிகளில் பல அடிப்படை பிரச்சினைகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இப்பகுதிகளில் வாழ்பவர்களின் பிள்ளைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துவது அனைவரது பொறுப்பாகும்.

தோட்ட பகுதிகளில் உள்ள அரச பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதை ஏற்றுக்கொள்கிறோம். சிறிபாத கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியாகும் ஆசிரியர்கள் பெருந்தோட்ட பகுதிகளுக்கு சேவையில் அமர்த்தப்படுகிறார்கள்.

பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு அரச நியமனங்களை வழங்குவதற்கும், ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்கும் உதவி ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டு ஆரம்பக்கட்ட நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன.

இருப்பினும் இந்த தீர்மானம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பினை அடிப்படையாகக்கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

# குத்தகைக்கே பெறப்பட்டது எயார் பஸ் விமானம்

இலங்கைவிமானசேவைக்குபுதிதாக கொண்டுவரப்பட்டிருக்கும்எயார் பஸ் விமானம்குத்தகைஅடிப்படையிலானது. 8வருடங்களில்அதனைமீண்டும்திருப்பிக் கொடுக்கவேண்டுமெனபோக்குவரத்து, விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் கில்ஸ் நெல்சன் உரையாற்றுகையில், விமான சேவைக்கு ஆளும்தரப்பு புதிதாக கொண்டுவந்திருக்கும் விமானத்தின் தரம், அதன் வசதி வாய்ப்புக்கள், அது பழையவிமானம்என்றாலும்அதன்மறு சீரமைப்பின்தரம்தொடர்பில்தெரிவிக்க வேண்டும் என கேண்டுக்கொண்டார். அதற்குபதிலளிக்கையிலேயேஇவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் பிரமல் ரத்நாயக்க தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கைவிமானசேவைக்குபுதிதாக கொண்டுவந்திருக்கும் எயார் பஸ் விமானம், மாதத்துக்கு 1000 டொலர் என்ற அடிப்படையில் குத்தகைக்கே கொண்டுவந்திருக்கிறோம். 8 வருடங்களில் அதனை மீண்டும் குறித் கம்பனிக்கு திருப்பிக்கொடுக்க வேண்டும்.

இந்த விமானம் இதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்டது என்பது உண்மை. புதிய விமானம் கொள்வனவு செய்வதற்குஇப்போதைக்குஎங்களுக்கு முடியாது. புதியவிமானம்கொள்வனவு செய்ய 1.3 மில்லியன் ரூபா செலுத்த வேண்டும்.

தற்போது நாங்கள் கொண்டுவந்திருக்கும் விமானம் மிகவும் நல்ல முறையில் மறுசீரமைத்தே கொண்டு வந்திருக்கிறோம். விமானத்தின் பாகங்கள்,இஞ்ஜின் மிகவும் முறையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. விமானத்தின் தரம் தொடர்பில் எந்த பிரச்சினையும் இல்லை.

நாங்கள் இந்த விமானத்துக்கான குத்தகையை நல்லமுறையில் செலுத்தி, 8 வருடங்களில் மீள ஒப்படைக்க இருகிறோம். எதிர்காலத்தில் மேலும் விமானங்களை கொண்டுவந்து இந்த சேவையை அபிவிருத்தி செய்யவே திட்டமிட்டிருக்கிறோம். அதனால் இந்த விமானம் தொடர்பில் தரம் குறைவாக கதைப்பது நல்லதில்லை என்றார்.

## அதிகாரிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டங்கள் உள்ளன.மேலும் அந்தச் சட்டங்களைச் செயல்படுத்தவும் அதன் மூலம் சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பை வழங்கவும் மிகவும் நேர்த்தியான அரச கட்டமைப்பு உள்ளது. எனினும் அவை இவ்வளவு காலமும் இயங்கியதா என்ற கேள்வி எனக்குள் உள்ளது.

முதலாவதாக இந்த பேரழிவுக்கு பின்னால் அரசியல் அதிகாரம் உள்ளது. நம் நாட்டில் உள்ள பெரும்பாலான பிரதேசங்களில் மணல் திட்டுக்கள் அரசியல்வாதிகள் அல்லது அரசியல்வாதிக்கு நெருக்கமான ஒருவருக்குச் சொந்தமானவை. இந்தநிலைமையைநீங்கள் என்னை விட நன்றாக அறிவீர்கள்.எமது காடுகளை அழித்ததன் பின்னணியில் அரசியல்வாதிகள் உள்ளனர். இதன் பின்னால் அரசியல் பாதுகாப்பும் அரசியல் அரவணைப்பும் உள்ளது.

எமது நாட்டின் அழகிய சுற்றுச்சூழல் அமைப்பை அழித்த துயரத்திற்கு இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தின் செயல்கள் காரணமாக அமைந்தன. அந்த சகாப்தத்தை நாம் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டோம். அதன்படி தற்போது அதிகாரிகள் மாற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.எனவே அரச அதிகாரிகள் உயிரைக் கொல்லும் பங்களாராக இருக்கக்கூடாது. உயிரைக் கொடுக்கும் பங்களராக மாற வேண்டும். அதற்குத்தேவையானஅரசியல்ஒத்துழைப்பை நாம் வழங்குகிறோம்.

எனினும் இங்கு அரசியல் அதிகாரம் மேம்படுத்தப்பட்டிருந்தாலும் பழைய அதிகாரத்துவ பொறிமுறையின் சில பகுதிகள் இன்னும் அந்த பழைமை வாதத்திலிருந்து விடுபடத்தவறிவிட்டன.எனவேஅந்தபழைமை வாதத்தை கைவிட்டு புதிததாக மாற வேண்டிய நேரம் ஆரம்பித்து விட்டது. எனவே நான் மீண்டும் கூறகிறேன்.மாறுங்கள் அல்லது நாம் மாற்றுவோம் என்றார்.

## தையிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்தின் தலைவர் ரொஹான் பிரனாந்துவினால் கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரை தொடர்பில் அப்பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்கள் மற்றும் விகாரைக்கும் இடையில் பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன.இந்த பிரச்சினைக்கு இனவாதம்என்றஉருவமளிக்கஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள்.தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலக சட்டத்தின் பிரதான பொறுப்பாக ' பல்லின சமூகத்துக்குள் மற்றும் அவர்களுக்கிடையில் சிறப்பான மற்றும் முரண்பாடுகளை தோற்றுவிக்க கூடிய விடயங்களுக்கு தீர்வு காணும் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆளும்தரப்புக்கு பரிந்துரைகளை முன்வைப்பதாகும்' உள்ளது.இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அலுவலகத்தின் தலைவர் மற்றும் அதிகாரிகள் குழுவினர் இந்த பிரதேசத்துக்கு பலமுறை சென்று பல்வேறு தரப்பினருடனும் பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.

## வடக்கிலுள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவியாழக்கிழமை இடம்பெற்ற தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாட்டின் அபிவிருத்திக்கு போக்குவரத்து வசதிகள் மிகவும் அவசியமாகும். குறிப்பாக வடக்கில் போக்குவரத்து சேவைகள் மிகவும் பின்தங்கியநிலையிலேயேகாணப்படுகின்றன. அதற்குமிகவும்மோசமாகபாதிக்கப்பட்டிருக்கும் வீதிகளும் காரணமாகும். என்றாலும் இந்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் வடக்கு மாகாண அபிவிருத்திக்காக 5ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதையிட்டு ஆளும்தரப்புக்கு நன்றி கூறுகிறேன்.

அதேபோன்று நாட்டில் வீதி விபத்துக்கள் தற்போது அதிகரித்துள்ளன. 2021ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் ஒரு வருத்தில் 22847 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் 2557 மரணங்கள் இடம்பெற்றுள்ளன.

அதேபோன்று 2023இல் வீதி விபத்துக்களில் 2280 மரணங்கள் இடம்பெற்றுள்ளன. அதனால் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை ஆளும்தரப்பு மேற்கொள்ள வேண்டும். போக்குரவத்து சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும்போது, தவறிழைக்கும் சாரதிகளுக்கான தண்டப்பணத்தை அதிகரிக்க வேண்டும்.

மேலும் வடக்கு மாகாணத்தில் போர் காலத்தில் இருந்து அங்கு வீதிகள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலே காணப்படுகின்றன. குறிப்பாக கிராம வீதிகள் எந்தவகையிலும் திருத்தப்படாமல் காணப்படுகின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் ஒருஇலட்சம் கிலோ மீட்டர் வீதிஅபிவிருத்திவேலைத்திட்டத்தில்ஒவ்வொரு மாவட்டத்திலும் 50, 60 கிலோ மீட்டர் தூரத்துக்கு காபட் வீதிகளாக அபிவிருத்திச் செய்ய எங்களால் நடவடிக்கை எடுக்க முடிந்தது.

என்றாலும் அதிகமான வீதி அபிவிருத்தி பணிகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதற்குபொருளாதார நெருக்கடியும் காரணமாக இருக்கலாம்.

என்றாலும் தற்போது ஆளும்தரப்பு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியில் இந்த வேலைகளை பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு பிரதேசத்தில் உள்ள கிராம வீதிகளுக்கு காபர்ட் போடுவதாக இருந்தால், ஒரு கிலோ மீட்டருக்கு 25ஆயிரம் மில்லியன் ரூபா தேவைப்படுவதாக மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனால் வடக்கு வீதிகளை அபிவிருத்தி செய்ய இன்னும் நிதி ஒதுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு இல்லாவிட்டால், வெளிநாட்டு உதவிகளை பெற்றாவது இந்த வீதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு மக்களை பொறுத்தவரை அவர்கள் எந்தகாலத்திலும்பெரும்பான்மைகட்சிகளுக்கு வாக்களிப்பது மிகவும் குறைவாகும். ஆனால் இந்த அரசாங்கத்தினால் தங்களின் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என்ற நம்பிக்கையிலே அந்த மக்கள் ஆளும்தரப்புக்கு வாக்களித்திருக்கின்றனர். அதனால் ஆளும்தரப்பு அந்த மக்களின் நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில் அங்குள்ள வீதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## டக்ளஸூடனான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகக்கட்சியின்சார்பில்அதன்தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொள்வர் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர்சிறிதரன்,உள்ளூராட்சிமன்றங்களில் கூட்டணி அமைப்பது குறித்து டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடுவது பற்றிக்கட்சியின்உயர்மட்டக்குழுவில்எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும், ஆகவே இச்சந்திப்பு தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனவும் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி கூட்டணி அமைப்பது குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசுவதற்கே கட்சி தீர்மானித்திருந்ததாகவும், அவ்வாறிருக்கையில் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமானகட்சியுடன்பேச்சுநடத்துவதெனில், அதுபற்றி கட்சியின் உயர்மட்டத்தில்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டியது அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## அச்சுறுத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும் 161 சபைகளில் மாத்திரமே அரசாங்கத்தால் ஆட்சியமைக்க முடிந்தது. ஏனைய கட்சிகளுடன் இணைந்து சபைகளை அமைப்பது ஜனநாயகத்துக்கு முரணானது என ஆளும்தரப்பு கூறிக் கொண்டிருக்கிறது. உள்ளூராட்சிமன்ற சட்டத்துக்கமையகட்சிகள்,சுயேச்சைகுழுக்கள் கூட்டணியமைத்து ஆட்சியமைக்க முடியும். எனவே அரசாங்கத்தின் பொய்களைக் கேட்டு மக்கள் ஏமாந்து விடக் கூடாது.

2000 மற்றும் 2004ஆம் ஆண்டுகளில் ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகளுக்கு ஜே.வி.பி. ஒத்துழைப்புக்களை வழங்கியிருக்கிறது. அன்று அது ஜனநாயகம் எனில், இன்று எவ்வாறு ஜனநாயக விரோதமாகும்? எஞ்சியுள்ள சபைகளுக்கான நியமனங்களை வழங்குவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 16ஆம் திகதி அவை ஆரம்பிக்கப்பட வேண்டும். குறிப்பாக கொழும்பு மாநகரசபை தொடர்பில் பரவலாகப் பேசப்படுகிறது.

கொழும்பில் நாமே ஆட்சியமைப்போம் என்றும் ஆளும்தரப்பு கூறுகிறது. பெரும்பான்மை எதிர்க்கட்சிகளிடம் இருக்கும் போதுஆளும்தரப்புஎவ்வாறுஆட்சியமைக்கும்? கொழும்பில் ஆட்சியமைப்பதற்காக அரசாங்கத்தால் பல்வேறு சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சுயேச்சை குழுக்கள், ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுடன் பேரம் பேசப்படுகிறது. இவற்றை முறியடித்து கொழும்பில் நாமே ஆட்சியமைப்போம் என்றார்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் சதோச மனித புதைகுழி வழக்கு இன்றைய தினம் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது ஏற்கனவே அழைக்கப்பட்ட சட்டத்தரணிகள் பிரசன்னமாகி இருந்த நிலையில், மன்னார் நீதிமன்ற நீதவான் மற்றும்அழைக்கப்பட்டநிறுவனத்தினரும் குறித்த சதோசமனித புதைகுழி பகுதியை இன்றைய தினம் காலை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். இதன்போது சில தீர்மானங்களுக்கு முன் வந்தார்கள்.

குறித்த புதைகுழி பிரதேசத்தை சுத்தப்படுத்துவதாகவும், நிறம்பியுள்ள நீரை அகற்றவதற்கு நகர சபை இனங்கிக்கொண்டுள்ளதன் அடிப்படையில், குறித்த நீரை அகற்றுவது என்றும்,குறித்த புதைகுழியை பகுதி அளவில் மூடுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது ஏற்கனவே எடுக்கப்பட்ட மண் சதோச நிறுவனத்திடம் காணப்படுகின்றதா?, அது எங்கே இருக்கிறது போன்ற விடையங்களை பொலிஸார் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறும், தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், இந்த வழங்கு மீண்டும் எதிர்வரும் 12 ஆம் திகதி மேலதிக நடவடிக்கைக்காக அழைக்கப்பட உள்ளதாக தெரிவித்தார்



காலைக்கதிர் Kalaikkathir

# இஸ்ரேலிய வழிபாட்டிடங்கள் மீது ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும்

## நாடாளுமன்றில் கலாசார அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையில் இஸ்ரேல் இனத்தவர்களின் சமய மற்றும் கலாசார நிலையங்களென நான்கு நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டு நிறுவனங்களே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவையும் கம்பனிகள் சட்டத்தின் கீழே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பதிவு செய்யப்படாமல் இருக்கும் ஏனைய சட்டவிரோத நிறுவனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்போமென புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேட்டிருந்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

முஜிபுர் ரஹ்மான் தனது கேள்வியில்,'இஸ்ரேல் இனத்தவர்களின் சமய மற்றும் கலாசார நிலையங்கள் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளனவா? அவை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை? அவற்றுக்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா' எனக் கேட்டிருந்தார்.

அதற்கு அமைச்சர் தந்த பதிலில் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கையில் இஸ்ரேல் இனத்தவர்களின் சமய மற்றும் கலாசார நிலையங்கள் என பொத்துவில், எல்ல, வெலிகம மற்றும் திபிரிகஸ்யாய ஆகிய பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தாபிக்கப்பட்டுள்ள சமய மற்றும் கலாசார நிலையங்களில் பொத்துவில் மற்றும் திபிரிகஸ்யாய ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கும் நிலையங்கள் பதிவு செய்யப்படாமல் இருக்கின்றன. மற்ற இரண்டு நிலையங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பொத்துவில் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் நிலையத்தை பதிவு செய்யாமல் இருப்பதற்கான காரணம் தெரியாது.

கிராம சேவகர் அந்த பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில், அதுதொடர்பில்தகவல்பெற்றுக்கொள்ள அங்குயாரும் இருக்கவில்லை என்பதால் பொது மக்களிடமிருந்து தகவல் பெற்றுக்கொண்டிருக்கிறார். அதன்போது அவர்கள், இது தனியார் காணி என்றும். அதனால் அதனைப் பதிவு செய்யாமல் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் இஸ்ரேல் இனத்தவர்கள் சுற்றுலா பயணிகளாக இந்தப் பிரதேசத்துக்கு வந்தால். இந்த மத நிலையத்தில் மத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் எனவும் தற்போது அவர்கள் இலங்கையில் இருந்து சென்றுள்ளனர் எனவும் பொது மக்கள் தெரிவித்தனர் என்று கிராம சேவகரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் திம்பிரிகஸ்யாய பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் கட்டடம் ஆளும்தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும் மத நிலையமாகவோ நிறுவனமாகவோ பதிவு செய்யப்பட்டதில்லை. பூஜை வழிபாட்டுக்காக என தெரிவித்து இஸ்ரேல் இனத்தவர்கள் 4 பேர் அங்கு தங்கி இருந்ததுடன் வெளிபிரதேசங்களில் இஸ்ரேல் இனத்தவர்கள் மத வழிபாட்டுக்காக சம்பந்தப்படுகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்டுள்ள வெளிகம மற்றும் எல்ல நிறுவனங்கள், நிறுவனங்கள் பதிவு செய்யும் பதிவாளர் காரியாலயத்திலே 2024- 4-22ஆம் திகதி பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்றார்.

இதன்போது மேலதிக கேள்வி ஒன்றை எழுப்பி முஜிபுர் ரஹ்மான், கொழும்பு பிரதேசத்தில் தற்போது இரண்டு இடங்களில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. அதில் ஒன்று கொழும்பு, 7 ரெட் சினமனுக்கு முன்னால் இருக்கும் ரபாப் ஹவுஸ். தெஹிவளை அல்விஸ் பிளேஸிலும் ஒரு நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு நிலையங்களும் சட்ட பூர்வமானதல்ல என்றும் பதிவு செய்யப்படவில்லை என்றும் பிரதமர் கடந்த டிசெம்பர் மாதம் இந்த சபையில் தெரிவித்திருந்தார். ஆனால் அந்த இரண்டு நிலையங்களும் ஆளும்தரப்பின் பொலிஸ் மற்றும் விசேட அதிரடைப்படை பாதுகாப்புடனே செயற்பட்டு வருகின்றன. சட்ட ரீதியற்ற இந்த மத நிலையங்கள் தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன? என கேட்கிறேன் என்றார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், இலங்கையில் நான்கு மதங்கள் இருக்கின்றன. அவற்றுக்கென திணைக்களங்கள் இருக்கின்றன. அவை பதிவு செய்யப்படுவதற்கான முறையொன்று இருக்கிறது. ஆனால் இஸ்ரேலுக்கு சொந்தமான இந்த கட்டடங்கள் கம்பனி சட்டத்தின் கீழே பதிவாகி இருக்கின்றன.

அவ்வாறு பதிவு செய்யப்படும்போது ஹோட்டல் அல்லது சிற்றுண்டிச்சாலை வியாபார நிலையம் போன்ற வடிவமே இருக்கும். ஆனால் அங்கு வேறு விடயங்கள் இடம்பெறுவதையே காணக்கூடியதாக இருக்கிறது.

இவற்றின் தகவல்களை சேகரிப்பதும் கடினமான விடயமாகும். அது தொடர்பான தகவல்களை நாங்கள் சேகரித்து வருகிறோம். அதேநேரம் இந்த நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை பாதுகாப்பு தற்போது நீக்கப்பட்டுள்ளதாகவே எனக்குத் தெரிவிக்கப்பட்டது என்றார்.

அதனைத் தொடர்ந்து மீண்டும் எழுந்த முஜிபுர் ரஹ்மான்,. கொழும்பு 7இல் உள்ள நிலையத்துக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை அகற்றப்பட்டுள்ளபோதும் பொலிஸ் பாதுகாப்பு தற்போதும் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான மத்திய நிலையங்கள் ஊடாக இஸ்ரேல் எமது நாட்டுக்குள் மறைமுகமாக நுழைந்திருக்கிறதா என்ற சந்தேகம் இருக்கிறது. நாடுகளுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்துகின்ற, மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கின்ற, காசாவில் இன அழிப்பை மேற்கொண்டுவரும் இஸ்ரேல் தொடர்பில் ஆளும்தரப்பு ஏன் இலகுவான முறையில் நடவடிக்கை எடுக்கிறது? அத்துடன் இந்த சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆளும்தரப்புக்கு இன்னும் எவ்வளவு காலம் தேவைப்படுகிறது? என்றார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், யூதர்கள் எமது நாட்டுக்கு மத நடவடிக்கைகளுக்குத்தான் வருகிறார்கள் என எங்களுக்கு உறுதியாகத் தெரிவிக்க முடியாது. அவர்கள் சுற்றுலா பயணிகளாகவும் நாட்டுக்குள் வருகிறார்கள். எனவே இந்த சட்ட விரோத கட்டடங்கள் தொடர்பில் இருக்கும் பிரச்சினையை தீர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். என்றாலும் சுற்றுலா பயணிகளாக அவர்கள் நாட்டுக்குள் வரும்போது, சுற்றுலா பயணிகளாக அவர்களுக்கு செய்ய வேண்டிய வசதிகளை நாங்கள் செய்துகொடுக்க வேண்டி ஏற்படுகிறது என்றார்.

# மருத்துவ நிபுணர்கள் சங்கம் நேற்று பணி நிறுத்த போராட்டம்

நிறைவு காண் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தினால் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று வியாழக்கிழமை வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால்நாடளாவியரீதியில்பலவைத்தியசாலைகளில் சேவைகள் முடங்கியதோடு, நோயாளர்களும்பெரும்அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

பதவி உயர்வு வழங்குவதில் நிலவும் தாமதம், பட்டதாரிகளை மருத்துவ துறையில் ஆட்சேர்பதில் காணப்படும் சிக்கல்கள் உள்ளிட்ட 5 கோரிக்கைகளை முன்வைத்து நிறைவு காண் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தினால் நேற்று காலை 8 மணி முதல் இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரசாயன மருத்துவ பரிசோதனைகள், மருந்துவழங்குனர்கள்உள்ளிட்ட மருத்துவதுறை சார் பணியாளர்கள் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். எவ்வாறிருப்பினும் புற்றுநோய் வைத்தியசாலை, மகப்பேற்று மற்றும் சிறுவர் வைத்தியசாலை, சிறுநீரக நோயாளர் வைத்தியசாலை, இரத்த வங்கி சேவை என்பவற்றில் வேலை நிறுத்த போராட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

எனினும் தேசிய கண் வைத்தியசாலை உள்ளிட்ட பிரதான வைத்தியசாலைகளில் பெரும்பாலான சேவைகள் இடம்பெறவில்லை. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நிறைவு காண் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத்தியர் சானக தர்மவிக்கிரம, சுகாதார அமைச்சினால் எமது கோரிக்கைகளுக்கு எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை. எனவே தான் மீண்டும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவதற்கு நாம் நிர்பந்திக்கப்பட்டோம்.

இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு காரணமாக இருந்த அதிகாரிகளே நோயாளர்கள் எதிர்கொண்ட அசௌகரியத்துக்கும் பொறுப்பு கூற வேண்டும். சுகாதார அமைச்சும் அதன் அதிகாரிகளும் தமது பொறுப்புக்களை நிறைவேற்றத்தவறும் பட்சத்தில் எமது உரிமைகளுக்காக போராடுவதைத் தவிர எமக்கு வேறு தெரிவு இல்லை என்றார்.

# ஈ.பி.டி.பி – தமிழரசு சந்திப்பு!

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில்,

இலங்கைத்தமிழ்அரசுக்கட்சிக்கும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கும் இடையிலான சந்திப்பு இன்று இடம்பெற்றது.

இன்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில் இலங்கைத்தமிழ்அரசுக் கட்சியின் சார்பில் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஈழ மக்கள் ஜனநாயககட்சியின்சார்பில்செயலாளர் நாயகம்டக்ளஸ்தேவானந்தாஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழரசுக் கட்சியின் கோரிக்கை மக்கள் நலன்சார்ந்து பரிசீலிக்கப்படும். - டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



இலங்கை தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ கோரிக்கைகட்சிமட்டத்தில்மக்கள் நலன்சார்ந்து பரிசீலிக்கப்படும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் அவர்களுடனான சந்திப்பினை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே செயலாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் யாழ் அலுவலகத்திற்கு வருகை தந்த திரு. சிவஞானம் அவர்கள், வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# JRIDE

இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA






இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.06.2025இல் வெளியிடப்பெற்றது